மா/வேவல்மட தமிழ் வித்தியாலயம்

075 7171 793, 077 691 3233

பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான அல்லது பொருத்தமான விடையை தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக
- செய்கை வேலைகளுக்காக ஒரு தாள் வழங்கப்படும்


விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
பெற்ற புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளி சரியாகும்	V/I/T/CH

www.ikeu.lk

1. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்க





(1)




(2)



(3)


2. தொடக்கத்தில் உள்ள உருவின் மேல் இரண்டாவதாக உள்ள உருவை வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க





(1) (2) (3)

3ம் 4ம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள உருவங்களை அடிப்படையாகக் கொண்டு சரியான விடைகளை தெரிவு செய்து கோடிடுக



3. ஒன்றோடொன்று சினேகமாக இருப்பதற்கு அதிக வாய்ப்புள்ள இரண்டு பிராணிகளும் எவை?

(1) Aயும் Bயும் (2) Bயும் Cயும் (3) Bயும் Eயும்

4. மிகப்பெரிய விலங்கும் மிகச்சிறிய விலங்கும் முறையே எவை?


(1) Aயும் Bயும் (2) Dயும் Bயும் (3) Bயும் Eயும்

5. கீழே ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பினைத் தெரிவு செய்க

(1)	(2)	(3)
மருத்துவர்	அதிபர்	மீனவர்
தாதி	ஆசிரியர்	கடல்
நோயாளி	மாணவர்	கடை

www.tkedu.lk

6. உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?





(1) 16 (2) 15 (3) 17

7. ஒரு மோட்டார் சைக்கிள் 10 நிமிடத்தில் 5கிலோமீற்றர் தூரம் பயணம் செய்கின்றது. எனின் 1மணித்தியாலத்தில் மோட்டார் சைக்கிள் பயணித்த தூரம் எவ்வளவு?

(1) 20km (2) 30km (3) 45km

8, 9 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் பொருட்களின் விலைகளை அவதானித்து சரியான விடைகளை தெரிவு செய்க





8. தோடம்பழம் ஒன்றின் விலை யாது?

(1) ரூபாய் 6.00 (2) ரூபாய் 7.00 (3) ரூபாய் 8.00

9. மூன்று மாம்பழங்களினதும் ஐந்து தோடம்பழங்களினதும் மொத்த விலை யாது?

(1) ரூபாய் 44.00 (2) ரூபாய் 58.00 (3) ரூபாய் 66.00

10. இலங்கையை ஒரு குடியரசு நாடாக பிரகடணப்படுத்திய ஆண்டு ஆனது

(1) 19ம் நூற்றாண்டின் 5ம் தசாப்தமாகும்

(2) 20ம் நூற்றாண்டின் 3ம் தசாப்தமாகும்

(3) 20ம் நூற்றாண்டின் 8ம் தசாப்தமாகும்

11. 1 தொடக்கம் 10 வரையுள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 18 (2) 20 (3) 25

12. ஒரு குறித்த ஆண்டின் செப்டெம்பர் 8ம் திகதி புதன்கிழமையாகும். அவ்வாண்டின் ஒக்டோபர் 8ம் திகதி என்ன கிழமையாகும்?

(1) வெள்ளி (2) சனி (3) வியாழன்

13. மாலதி சுதாவின் மகள், ரகுமான் மாலதியின் சகோதரன். சுதா குமாரின் மகள். எனின் ரகுமான் குமாரிற்கு என்ன உறவு முறை?

(1) மகன் (2) பேரன் (3) மருமகன்

www.ikeou.lk

14. கிணறு ஒன்றைக் கட்டுவதற்கு 4 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவை எனின் 3 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் தேவைப்படும்?

(1) 8 நாட்கள் (2) 10 நாட்கள் (3) 6 நாட்கள்

15. 

அருகில் உள்ள புகைப்படம் ஒரு நாளில் எந்நேரத்தில் எடுக்கப்பட்டிருக்கும்?

(1) நண்பகல் (2) காலை (3) மாலை


16. வைத்தியர் ஒருவர் நோயாளிக்கு 3 மணித்தியாலம் 30 நிமிடத்திற்கு ஒரு தடவை மாத்திரை பாவிக்குமாறு ஆலோசனை வழங்கினார். இவர் இரண்டாவது வேளை மாத்திரையை நண்பகல் 12.00 மணிக்கு பாவித்தார். எனின் முதலாவது ஐந்தாவது வேளையில் மாத்திரையை பாவித்த நேரங்கள் எவை?

(1) மு.ப 9.30, பி.ப 10.30

(2) மு.ப 8.30, பி.ப 10.30

(3) மு.ப 8.30, பி.ப 10.00

17. கீழே தரப்பட்டுள்ள உருக்கோலத்தினை அவதானித்து ? இடப்பட்டுள்ள இடத்திற்கு வர வேண்டிய பெறுமதியை குறிப்பிடுக?




(1) 10


(2) 14

(3) 20

18. கீழே உரு 1 இல் உள்ள கடதாசியை உரு 2இல் உள்ளவாறு மடித்து உரு 3இல் உள்ள நிழற்றிய பகுதியை வெட்டி எடுத்து மீதி பகுதியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் எது?



உரு 1 உரு 2




(1) (2) (3)

www.tkedu.lk

19. ஒரு பேருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 15 பயணிகள் ஆசனங்களும் 6 பயணிகள் அமரத்தக்க ஒரு பயணிகள் ஆசனமும் உள்ளன. அப்பேருந்தில் அமர்ந்து செல்லத்தக்க பயணிகளின் மிகக் கூடிய எண்ணிக்கை யாது?


(1) 21 (2) 36 (3) 42

20. அதிகூடிய சமச்சீர் அச்சுக்களை கொண்ட உருவம் எது?




(1) (2) (3)

21 உருவில் காட்டப்பட்டுள்ளவாறு இரு நுனிகளும் சந்திக்குமாறு ஒரு கம்பியை வளைத்துப் பெறத்தக்க வடிவம் யாது?



(1) (2) (3)

22. கீழே தாயக்கட்டையொன்றினை மூன்று தடவை சுழற்றி விழுந்துள்ள நிலைகள் தரப்பட்டுள்ளன. இதில் ஆங்கில எழுத்து 1 இற்கு எதிரே அமையக் கூடிய இலக்கம் யாது?



(1) 5 (2) 3 (3) 2

23. வாகன தரிப்பிடம் ஒன்றில் கார்களும் மோட்டார் சைக்கிள்களுமாக 43 வாகனங்கள் உள்ளன அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை 122 ஆகும். அங்குள்ள கார்களின் எண்ணிக்கை யாது?

(1) 18 (2) 20 (3) 23

24. சதுர வடிவ வீட்டுத் தோட்டத்தை சுற்றி 64 கம்பங்கள் நடப்பட்டன. ஏல்லாப் பக்கங்களிலும் சம அளவான கம்பங்கள் நடப்பட்டன. ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது தென்படும் கம்பங்களின் எண்ணிக்கை யாது?

(1) 16 கம்பங்கள் (2) 17 கம்பங்கள் (3)18 கம்பங்கள்

www.tkedu.lk

25. உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பின்னம் யாது?



(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{8}$ (3) $\frac{1}{3}$


26. பின்வரும் தகவல்களின் சரியான ஒழுங்கு வரிசை யாது?

(1) சொல் - எழுத்து - வாக்கியம் - பந்தி

(2) எழுத்து - சொல் - வாக்கியம் - பந்தி

(3) எழுத்து - வாக்கியம் - சொல் - பந்தி

27. பின்வரும் எண்கோலங்களை அவதானித்து இடைவெளிக்கு வரவேண்டிய பெறுமதியை தெரிவு செய்க



(1) 40

(2) 50

(3) 60

விண்வெளியில் நடப்பவரை
வீட்டிற்கே கொண்டு வந்து
கண் எதிரே காட்டிவிடும்
களிப்படையச் செய்திடும்

28. இங்கு விண்வெளி என்று கூறப்படுவது யாது?

(1) பூமிக்கு உள்ளே உள்ள பகுதியாகும்

(2) பூமிக்கு மேல் உள்ள வான் பகுதியாகும்

(3) பூமியின் மேற்பரப்பில் அமைந்த பகுதியாகும்


29. .....இருள் வேளையில் .....தெரியாத நபர் ..... பிரம்போடு மெதுவாக நடந்தார். இவ்வாக்கியத்தின் இடைவெளிகளுக்கு வரவேண்டிய சொற்கள் முறையே

(1) மென்மையான, கண், வெள்ளைப்

(2) கடும், கண், வெள்ளைப்

(3) கடும், காது, கரும்

30.



அருகில் சதுர வடிவான அடித்தளத்தைக் கொண்ட கூம்பகம் ஒன்று தரப்பட்டுள்ளது. இக் கூம்பகத்தில் புள்ளிக்கோடுகள் இடப்பட்டுள்ள பகுதியை வெட்டி எடுக்கப்பட்டது. வெட்டியெடுக்கப்பட்ட நடுப்பகுதியில் காணக்கூடிய விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 4 (3) 8

www.keau.lk

31. பழக்கடையொன்றில் மூன்று கூடைகளில் மாம்பழங்கள் பின்வருமாறு வைக்கப்பட்டிருந்தன.


- முதலாவது கூடையிலிருந்து 6 பழங்கள் இரண்டாவது கூடையில் வைக்கப்பட்டது.
- இரண்டாவது கூடையிலிருந்து 4 பழங்கள் மூன்றாவது கூடையில் இடப்பட்டது.
- மூன்றாவது கூடையிலிருந்து 3 பழங்கள் முதலாவது கூடைக்குள் இடப்பட்டது
- ஆரம்பத்தில் ஒவ்வொரு கூடையிலும் 10 மாம்பழங்கள் வீதம் இருந்தன

இதன்படி தற்போது இம்மூன்று கூடைகளிலும் இருக்கக் கூடிய பழங்களின் எண்ணிக்கை முறையே

(1) 7, 12, 11 (2) 12, 11, 7 (3) 7, 11, 12

32. பாடசாலையொன்றில் தரம் 5 மாணவர்களில் சிலர் வட்ட வடிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். இரண்டு ஆண் மாணவர்களுக்கிடையில் இரண்டு பெண் மாணவிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். இங்கு நிற்கும் பெண் மாணவிகளின் எண்ணிக்கை 16 பேர் எனின் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 9



33. ரஹீம் ஆக்கம் ஒன்றிற்காக மேலே உள்ளவாறு பற்சில்லுத் தொகுதியொன்றினை செய்தான். இதில் பற்சில்லு Aயினை இடமிருந்து வலமாக சுற்றும் போது மற்றைய இரு பற்சில்லுகளினதும் இயக்கத்தில் அவனால் காணக்கூடிய நிகழ்வுகளில் மிகச் சரியானது எது?

(1) பற்சில்லு B இடப்புறமாகவும் பற்சில்லு C வலப்புறமாகவும் சுழலும்

(2) பற்சில்லு B வலப்புறமாகவும் C இடப்புறமாகவும் சுழலும்

(3) பற்சில்லு B யும் C யும் வலமிருந்து இடமாக சுழலும்

34. விளையாட்டுப் போட்டி ஒன்றில் கர்ணன் தனது வரிசையில் 6 வதாகவும் அதே வரிசையில் மதன், கர்ணன் இருக்கும் இடத்திற்கு அடுத்ததிலிருந்து 19 வதாகவும், ரவி அதே வரிசையில் நடுவிலும் நிற்கின்றனர். ரவி எத்தனையாம் இடத்தில் நிற்கின்றான்?

(1) 12வது (2) 13வது (3) 14வது

35. நான்கு நண்பர்கள் உணவகம் ஒன்றில் உணவு உண்ட பின் மூன்று நண்பர்கள் ஆளுக்கு ரூபாய் 160.00 வீதம் இட்டு உணவின் மொத்த செலவினை பகிர்ந்து கொண்டனர். நான்காவதாக உள்ள நண்பர் தன்னுடைய பங்கிற்காக கொடுக்க வேண்டிய பணம் யாது?

(1) ரூபாய் 180.00 (2) ரூபாய் 100.00 (3) ரூபாய் 120.00

www.ikeduk

36. கீழ்வருவனவற்றுள் சரியான கணிதக் கோவையை தெரிவு செய்க

(1) $333 + 333 + 33 + 33 + 3 = 705$

(2) $333 + 333 + 33 + 3 + 3 = 705$

(3) $333 + 33 + 33 + 33 + 33 = 705$

37. ஒருவர் அச்சமடைந்த சந்தர்ப்பத்தை காட்டுவதற்கு உகந்த உவமானம் பின்வருவனவற்றில் எது?

(1) மான்குட்டி போல நடுங்கினார்

(2) புறா போல ஒலி எழுப்பினார்

(3) புலி போல உறுமினார்


38. கமல் நாளொன்றின் 36ம் பக்கத்திலிருந்து 73ம் பக்கம் வரை வாசித்துவிட்டு இரவு நித்திரைக்குச் சென்றான். அவன் வாசித்த தாள்களின் எண்ணிக்கை யாது?

(1) 28 தாள்கள் *(2)* 27 தாள்கள் *(3)* 19 தாள்கள்

39. இன்று ஞாயிற்றுக் கிழமை நேற்று முன் தினத்திற்கும் கடந்த திங்கட்கிழமைக்கும் இடையே எத்தனை நாட்கள் இருந்தன?

(1) 1 நாள் *(2)* 2 நாட்கள் *(3)* 3 நாட்கள்

40. பின்வரும் திண்மங்களை அவற்றின் மேற்பரப்புக்களின் எண்ணிக்கைக்கு அமைவாக கூடியது முதல் குறைந்தது வரை சரியாக வரிசைப்படுத்தினால் வருவது



(1) C, A, D, B *(2)* C, D, A, B *(3)* C, D, B, A

www.ikedu.lk

2022ம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களை தரம் உயர்த்தும் முகமாக

மாத்தளை சுபீட்சம் இந்து சமூக நலன்புரி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலவசமாக நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை 2022

வினாப்பத்திரம் II

நிலையம் :..... திகதி :.....

பெயர் :..... 1 மணித்தியாலம் 15 நிமிடம்

திருமதி *M.R.F* .ரிப்கா *SLTS 3-I, NDT*

திருமதி *R.M.* மேரி *SLTS 3-I, NDT*
மா/வேவல்மட தமிழ் வித்தியாலயம்

பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாப்பத்திரத்திலேயே எழுதுக
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளை புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருப்பின் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
பெற்ற புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளி சரியாகும்	V/I/T/CH

www.ikeau.lk

1. பின்வரும் பந்தியை நன்கு வாசிக்குக

கிராமிய விளையாட்டுக்கள், வீரத்தையும் விவேகத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவன. விளையாட்டில் சிறுவர், சிறுமியர், இளையோர், முதியோர் என எல்லோரும் ஈடுபடுகின்றனர். உடற்றிறனை வளர்க்க, உள்ளத்தில் ஆர்வத்தையும் மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் குழு உணர்வையும் ஏற்படுத்தக் கிராமிய விளையாட்டுக்கள் துணைபுரிகின்றன.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பந்தியை துணையாக கொண்டு விடை எழுதுக

1) இப்பந்திக்கு பொருத்தமான ஒரு தலைப்பினை எழுதுக

.....

2) கிராமிய விளையாட்டுக்கள் எவற்றை வெளிப்படுத்துவன?

.....

3) கிராமிய விளையாட்டுக்கள் இரண்டை குறிப்பிடுக

.....

4) உயர்திணை பலர்பால் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக

.....

5) இப்பந்தியில் வந்துள்ள எதிர்க்கருத்துச் சொற்சோடியை குறிப்பிடுக

.....

6) ஈடுபடுவர் என்ற சொல்லின் நிகழ்கால சொல் வடிவம் எது?

.....

2. பின்வருவனவற்றில் அ.்றிணை இறந்தகால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக

(1) பறக்கின்றது (2) ஓடியது (3) குடித்தன

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக

தமது/ அண்டியே/ குடியிருப்புக்களை/ முற்கால/ அமைத்தனர்/ குளங்களை/ மக்கள்

.....

4. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக

1) மரம் முழுவதும் மஞ்சள் நிறப் பூக்கள் காணப்பட்டது. ( )

2) அரசர், படைத்தளபதிகளுடன் ஆலோசனை புரிந்தார்கள். ( )

5. கீழ்வரும் வாக்கியத்திற்கு பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக

கல்விக்கு அழகு கசடறக் மொழிதல் என்றனர் எம் முன்னோர்கள்

6. கீழ்வரும் பழமொழியை பொருத்தமான சொற்களைக் கொண்டு பூர்த்தி செய்க

இறக்கப் போனாலும்.....

www.ikeau.lk

7. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்து எழுதுக

1) எல்லோரும் வீட்டு..... வந்து அமர்ந்தார்கள் (முற்றத்தில்/முட்றத்தில்)

2) தத்தம் பணியிடங்களை நோக்கி .....விரைகின்றனர். (ஊழியர்கள்/ ஊளியர்கள்)

8. பின்வரும் பேச்சுவழக்கு வாக்கியத்தினை எழுத்து வழக்கு வாக்கியமாக மாற்றி நிகழ்காலத்தில் எழுதுக

நான் இளனீ குடிச்சேன்

.....

9. பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரும் வெளிப்படுத்தும் கருத்துக்களை புள்ளிக்கோட்டில் எழுதுக

1) தடவிக்கொடுத்தல் :.....

2) தலைக் கவிழ்தல் :.....

10. பின்வரும் சொல்லிற்கு பொருத்தமான எதிர்பாற் சொல்லை எழுதுக

உழத்தி :.....

11. பின்வரும் ஆங்கில சொற்களை தமிழில் எழுதுக

1) *Milk* :..... 2) *News Paper* :.....

12. கீழே குழம்பியுள்ள ஆங்கில வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக

1) *is / fruit / It / a /*


.....

2) *Live / colombo / I / in / am*

.....

13. பின்வரும் படங்களுக்கு பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக





www.ikedu.lk

14. **"சந்துதா"** என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக

……..

15. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக**

உள்ளே வாருங்கள் :……

16. ஒன்றினிடம் 5, பத்தினிடம் 0, நூறினிடம் 7, ஆயிரத்தினிடம் 3, பத்தாயிரத்தினிடம் 5 ஆகவுள்ள எண்ணை சொற்களில் எழுதுக

……

17. 7956 எனும் எண்ணில் இலக்கம் 9, இலக்கம் 6 ஆகியவற்றினால் வகைக்குறிக்கப்படும் பெறுமானங்களை எழுதுக

……

18. பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதுக

2642, 2691, 2672 :……

19. தரப்பட்டுள்ள எண்கோலங்களில் அடுத்துவரும் எண்களை எழுதுக

(1) 2, 4, 7, 11, …… (2) 27, 23, 19, 15, ……..

20. மூன்று ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கைகள் தொடர்பான விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பாடசாலை	மாணவர்கள்
A	460
B	275
c	825

1) A,B ஆகிய பாடசாலைகளில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையாது?

……...

2) C பாடசாலையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது A,Bஆகிய பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

……

21. 32 புத்தகங்களில் 3/4 பங்கு விற்கப்பட்டது. மீதியான புத்தகங்கள் எத்தனை?

……

22. ஒரு வியாபாரி 58kg 700g நிறையுள்ள வற்றாளை கிழங்கிலிருந்து 36kg 800g வற்றாளைக் கிழங்கை விற்பனை செய்தார். எஞ்சிய வற்றாளைக் கிழங்கின் நிறை யாது?

……kg ……...g

23. பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழா ஆரம்பித்த நேரத்தை கடிகாரம் Aயும்முடிவடைந்த நேரத்தை கடிகாரம் Bயும் காட்டுகின்றன பரிசளிப்பு விழா எவ்வளவு நேரம் நடைபெற்றது?



A



B


……..மணித்தியாலம் ……...நிமிடம்

24. 420 கொய்யாப்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள கொய்யாப்பழங்களின் எண்ணிக்கை யாது?

……...

www.ikedu.lk

25. கீழுள்ள உருக்களை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக



1) சமச்சீர் அல்லாத உருக்களின் எழுத்துக்களை எழுதுக

.....

2) அதிக எண்ணிக்கையிலான சமச்சீர் அச்சுக்களை வரையத்தக்க உருவின் ஆங்கில எழுத்தை குறிப்பிடுக

.....

26. ஓர் அன்னாசிப் பழத்தின் விலை ரூபாய் 280.00 ஆகும். மனோ, இரண்டு அன்னாசிப்பழங்களை விலைக்கு வாங்கி கடைக்காரரிடம் ரூபாய் 500.00 நாணயத்தாள் ஒன்றையும் ரூபாய் 100.00 நாணயத்தாள் ஒன்றையும் கொடுத்தான். மனோவிற்கு கிடைக்க வேண்டிய மீதிப்பணம் யாது?

ரூபாய் ..... சதம்.....

27. ஒரு லீற்றர் பாலை ஒவ்வொன்றும் 275 மில்லிலீற்றர் அளவான 3 குவளைகளில் இடும்போது எஞ்சியிருக்கும் கனவளவு யாது?

.....

28. ஒரு மோட்டார் வாகனத்தை ஒரு லீற்றர் பெற்றோலில் 6கிலோமீற்றர் தூரம் செலுத்தலாம். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபாய் 250.00 எனின் 30கிலோமீற்றர் தூரம் பயணிப்பதற்கு தேவையான பெற்றோலிற்கான செலவு யாது?

ரூபாய்.....


29. சிற்றுண்டிச் சாலை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்களின் விபரங்கள் நிரல் வரைபில் காட்டப்பட்டுள்ளது.

1) விற்கப்பட்ட எந்த இரு இனிப்புப் பண்டங்களின் மொத்த எண்ணிக்கை விற்கப்பட்ட பூந்தியின் எண்ணிக்கைக்கு சமனாகும்?

.....

2) கேக்கின் எண்ணிக்கையை விட கூடுதலாக எவ்வளவு எள்ளுருண்டைகள் விற்கப்பட்டுள்ளன

.....



www.keou.lk

30 தொடக்கம் 59 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

30. எமது நாட்டின் தேசிய மரபுரிமைகள் எவை?
(1) ஓவியங்கள், கற்செதுக்கல்கள்
(2) பாடசாலை சீருடை, பாடப் புத்தகங்கள்.
(3) உபகரணங்கள், ஆபரணங்கள்.

31. இலங்கை சுதந்திரப் போராட்டத்தில் பிரதான தளபதியாக செயற்பட்டவர்?
(1) கெப்பெட்டி பொல திசாவை
(2) கொங்காலேகொட பண்டா.
(3) பராக்கிரமபாகு.

32. தாவர வளர்ச்சிக்கு அவசியமான காரணிகளின் தொகுதி எது?
(1) மணல்மண், அதிகவெப்பம், நீர்
(2) சூரிய ஒளி, மண், நீர்
(3) களிமண், நீர், உரம்

33. மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டங்களில் ஒன்று?
(1) கொழும்பு (2) கண்டி (3) புத்தளம்

34. வாசனைத்தைலம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் பூ வகைகள்
(1) ரோஜா, மல்லிகை,
(2) கடதாசிப்பூ, நித்தியகல்யாணி
(3) பூவரசு, எக்சோரா

35. வலிமையான அலகின் மூலம் வித்துக்களை வெட்டி உண்ணும் திறன் கொண்ட பிராணி எது?
(1) கிளி (2) கோழி (3) தாரா

36. எமக்கு இலவச சேவைகளை பெற்றுத்தரும் நிறுவனங்களில் ஒன்று
(1) வீடு
(2) கோவில்
(3) கிராம சேவகர் அலுவலகம்

37. பின்வருவனவற்றில் வேம்பு இலையினைக் குறிக்கும் படம் எது?


(1)


(2)


(3)

38. சக்தி தரும் போசணைக் கூறுகள் அதிகமாக உள்ள உணவு யாது?
(1) தானியங்கள் (2) கிழங்கு வகைகள் (3) பால்

39. விற்றமின் D குறைப்பாட்டினால் ஏற்படக் கூடிய பாதிப்பு எது?
(1) பசியின்மை
(2) என்பு நோய்கள்
(3) காயங்கள் ஆறுவதற்கு தாமதமாகுதல்

40. தாவரங்களில் உணவு சேமித்து வைக்கப்படும் பகுதி எது?
(1) வேர் (2) இலை (3) பூ

www.lkedu.lk

41. ஒரு நாளிற்குள் மிக வேகமாக வளரக் கூடிய தாவரம் எது??
(1) பலா (2) மூங்கில் (3) மா

42. மணமகனைக் கால் கழுவி வரவேற்றல், நீர் நிரம்பிய நிறைக் குடமொன்றை முன்னே வைத்தல் போன்ற திருமண சடங்குமுறைகள் எம் மதத்திற்குரியது?
(1) பௌத்தம் (2) இந்து (3) இஸ்லாம்

43. எமது சூழலில் இடம்பெறும் சட்டவிரோத செயல்களில் ஒன்று?
(1) குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்தல்
(2) போதைப்பொருள் பாவனை
(3) பாதிரியார்களின் சேவைகள்

44. மிகச் சிறிய பொருட்களை தெளிவாக பார்ப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்?
(1) மூக்குக் கண்ணாடி (2) தளவாடி (3) கைவில்லை

45. பற்சக்கரங்கள் அதிகம் காணப்படும் பொருட்களில் ஒன்று?
(1) வானொலி (2) மணிக்கூடு (3) சைக்கிள்

46. தினசரி வாழ்க்கையில் மனிதர்கள் பயன்படுத்தி ஒதுக்கிய கழிவுப் பொருட்களை மீளப்பயன்படுத்துவது என்பது?
(1) மீள்சுழற்சி (2) தினப்பாவனை (3) மீள்பாவனை

47. பயிர்ச்செய்கைக்கு பாதகம் விளைவிக்கும் பிராணிகளுள் ஒன்று
(1) மண்புழு (2) தத்து வெட்டி (3) கோழி


48. தலைக்கவசம் அணிந்து பணி புரியும் தரப்பினர்கள்
(1) ஆசிரியர் (2) கல்லுடைப்பவர் (3) மீனவர்கள்

49. அருகில் உள்ள உருப்படம் குறித்து நிற்பது?
(1) இலங்கை பெற்றறோலிய கூட்டுத்தாபனம்
(2) எரிபொருள் நிரப்பு நிலையம்
(3) இலங்கை வீதி அதிகார சபை



50. பின்வருவனவற்றுள் நீரில் கரையும் பொருள் எது?
(1) தார் (2) மெழுகு (3) சுண்ணாம்பு

51. வாகன ஒளிச் சமிக்ஞைத் தூணில் நிறங்கள் முறையே
(1) A - நிறுத்துக B - செல்க, C– ஆயத்தமாகுக
(2) A - நிறுத்துக B - ஆயத்தமாகுக C– செல்க
(3) A - செல்க, B - ஆயத்தமாகுக C– நிறுத்ததுக



52. வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சாதனப் பொருள் அல்லாதது?
(1) துருவிலை (2) மின் கேத்தல் (3) குளிரூட்டி

53. அருகில் தரப்பட்டுள்ள உருவப் படம் சூரிய நமஸ்காரப் படிமுறைகளில் எத்தனையாம் படிமுறை?
(1) இரண்டாவது
(2) முதலாவது
(3) மூன்றாவது



www.kedu.lk

54. ஐப்பசி மாதத்தில் பூக்கும் தாவரங்களில் ஒன்று
(1) வாகை (2) அன்னாமுன்னா (3) பிறைப்பூ

55. பின்வருவனவற்றுள் ஆரோக்கியமான உணவுப் பழக்கம் எது?
(1) செயற்கைமுறை மூலம் பழுத்த பழங்களை சேர்த்துக்கொள்ளுதல்
(2) எண்ணை மற்றும் பொரியல் உணவுகளை அளவாக சேர்த்துக் கொள்ளுதல்
(3) மாப்பொருள் கொண்ட உணவுகளை மாத்திரம் உண்ணுதல்

56. இலங்கையில் அதிகளவு வெள்ளப்பெருக்கு ஏற்படும் பிரதேசங்கள் எவை?
(1) அம்பாந்தோட்டை, கண்டி
(2) அநுராதபுரம், இரத்தினபுரி
(3) பதுளை, மொனராகலை

57. சீதப்பேதி நோய் ஏற்படுவதற்கான காரணமாக அமையாதது?
(1) அசுத்தமான உணவு உண்ணுதல்
(2) அசுத்தமான நீர் அருந்துதல்
(3) அதிக இனிப்பு சேர்க்கப்பட்ட குளிர்பானங்களை அருந்துதல்

58. சிக்கிம் பிராந்தியத்தில் பிறந்து எஸ்.கே தசினம் கல் என்ற இயற்பெயர் கொண்டவரின் சரியான உருப்படம் ?



(1)



(2)



(3)

59. ஒரு அணியில் குறைந்த பட்சம் 11 பேர் விளையாடக் கூடிய விளையாட்டு எது?
(1) கரப்பந்து (2) கிரிக்கெட் (3) பூப்பந்து

60. **நீங்கள் முதன் முதலாக சென்ற பூஞ்சோலை** என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய் பயனிலை தொடர்புடன் சரியான எழுத்துக்கூட்டலும் இருக்க வேண்டும்)

(1).....

.....

(2).....

.....

(3).....

www.kedu.lk

மா/கலைமகள் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்படும்

மாணவர்களை பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
2022
வினாப்பத்திரம் I

LETS BEGAN

1 மணித்தியாலம் சுட்டெண்:.....

திரு S. லக்ஸ்மிகாந்த் SLTS 2-II
BA, PGDE, HR
வளவாளர் அரசியல் விஞ்ஞானம், தமிழ், தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், ஆரம்பக்கல்வி
மா/வேவல்மட தமிழ் வித்தியாலயம்
077 691 3233

பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக
- ஓவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான அல்லது பொருத்தமான விடையை தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
பெற்ற புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளி சரியாகும்	V/I/T/CH

www.lkedu.lk

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

1. பின்வரும் உருவங்கள் மூன்றில் ஒன்று மற்றைவைகளில் இருந்து வேறுபடுகின்றது. அவ் உருவை தெரிவு செய்க



(1)




(2)



(3)

2. கீழே தரப்பட்டுள்ள உருவத்தோடு தொடர்புடைய மிகப்பொருத்தமான சொற் தொகுதியை தெரிவு செய்க




(1) இசை, ஊதுதல்

(2) வாத்தியக்கருவி, வருடல்

(3) சத்தம், தோற்கருவி


3. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வகைப்படுத்தமுடியும் அவற்றை வகைப்படுத்தக் கூடிய சரியான விடைத்தொகுதியை தெரிவு செய்க




A




B



C



D




E

B	E	A	C	D	A	E	C	B	D	A	D	B	E	C

(1) (2) (3)

4. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டிற்கு மாத்திரம் பொருத்தமான சொல்லை தெரிவு செய்க








(1) நேரம் (2) மின்னியல் ஊடகம் (3) கல்வி

www.lkedu.lk

5. பின்வரும் கோலத்தை அவதானித்து அடுத்து வரும் உருக்கோலத்தை தெரிவு செய்க



(1)

(2)

(3)

6. என்னால் இது செய்ய முடியாது? - எனும்
எதிர்மறைப் பேச்சை விட்டுவிடு!
என்னால் எது செய்ய முடியாது? - எனும்
ஏற்ற கேள்வி கேட்டுவிடு!
இப்பாடலின் பிரதான கருத்தாக கொள்ளக் கூடியது எது?

(1) பொறுமை (2) ஊக்கம் (3) விருப்பம்

7. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் ஆங்கில எழுத்துக்கள் A,B இடப்பட்டுள்ள இடங்களிற்கு பொருத்தமற்ற சொற்சோடிகளை தெரிவு செய்க

கட்புலம்	செவிப்புலம்	கட்புல செவிப்புலம்
புத்தகம்	ஒலிப்பெருக்கி	B
A	வானொலி	தொலைக்காட்சி

(1) இணையம், சுவரொட்டி
(2) கடதாசி, திறன் கைப்பேசி
(3) ஒளிப்படம், மடி கணனி

8. கீழே சில எண்ணும் எண்கள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. இவற்றை பெரியதில் இருந்து சிறயது வரை வரிசைப்படுத்துவதற்கு ஆகக் குறைந்தது எத்தனை எண்களை இடம் மாற்ற வேண்டும்?

73	81	65	69	77

(1) ஐந்து (2) ஆறு (3) நான்கு

9. ஒரு வீட்டில் அப்பாவினதும் அம்மாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 102 ஆகும். மாமாவின் வயது இதில் இரு மடங்கு குறைவாகும். மாமாவின் வயதிலும் பார்க்க எனது வயது 25 வருடங்கள் குறைவாகும் எனின் அப்பாவின் வயது யாது?

(1) 53 வயது (2) 49 வயது (3) 51 வயது

10...... வந்த சிறுவன் சுவையான ..... உண்பதற்காக வீட்டிற்கு ..... ஓடி வந்தான்.
இவ் வாக்கியத்தின் இடைவெளிகளுக்கு வரவேண்டிய சரியான சொற்கூட்டம் யாது?

(1) பசியுடன், உணவை, வேகமாக
(2) கோபத்துடன், பழத்தை, மெதுவாக
(3) தாகத்துடன், நீரை, விரைவாக

www.ikeu.lk

11. புவன் கதைப்புத்தகமொன்றை வாசிக்கும் போது புத்தகத்தில் உள்ள நூல் கழன்றமையால் அப்புத்தகத்தின் நடுப்பகுதியின் இரு தாள்களும் கழன்றுவிட்டன. அவ்விரு தாள்களிலும் முன்பக்கத்தின் இடது முலையில் 42, எனவும் வலது பக்க மூலையில் 43 எனவும் பக்க எண்கள் இடப்பட்டிருந்தன. அவ்விரு தாள்களின் மறுபக்கங்கள் இரண்டிலும் இருக்கக் கூடிய இலக்கங்கள் யாவை?

(1) 41, 44 (2) 41, 45 (3) 39, 44

12. எதிர்வரும் தினங்களில் மாத்தளை மாவட்டத்தில் சில பிரதேசங்களில் அமுல்படுத்தவிருக்கும் மின்வெட்டு அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

பிரதேசம்	**மின்சாரம் துண்டிக்கப்படும் நேரம்**	**மின்சாரம் இணைக்கப்படும் நேரம்**
உக்குவெல	மு.ப 8.00	மு.ப 9.30
பலாபத்வல	மு.ப 9.00	மு.ப 10.30
இரத்தோட்டை	மு.ப 8.30	மு.ப 10.00

மூன்று பிரதேசங்களும் மின்வெட்டிற்கு உள்ளாகியிருக்கும் நேரம் யாது?

(1) மு.ப 9.00 முதல் மு.ப 10.00 வரை

(2) மு.ப 9.00 முதல் மு.ப 9.30 வரை

(3) மு.ப 8.00 முதல் மு.ப 10.30 வரை

13. சிரோன் சித்திரப் பாடத்திற்காக கீழே தரப்பட்டுள்ள உருவை வரைந்தான் இவ்வுருவினுள் உள்ள கோணங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கூற்றினை தெரிவு செய்க



(1) மற்றைய கோணங்களை விட செங்கோணங்கள் குறைவாகும்

(2) செங்கோணத்தை விட கூடிய கோணங்கிலும் பார்க்க குறைந்த கோணங்கள் அதிகமாகும்

(3) இங்கு செங்கோணத்தை விட கூடியகோணங்கள் இல்லை

14. கடைக்காரர் குமரேசனிடம் தனது கடையில் உள்ள பொருட்களின் நிறையை அளவிடுவதற்காக 250g, 500g, 2kg ஆகிய படிக்கற்கள் மட்டுமே இருக்கின்றன. இவற்றைக் கொண்டு 1kg250g பருப்பினை நிறுப்பதற்கு முயற்சி செய்கின்றார். இவர் மேற்கொள்ளும் முயற்சியானது

(1) தோல்வியடையும் (2) வெற்றியளிக்கும் (3) கூறமுடியாது

15. வியாபாரி ஒருவர் ஒரு பென்சிலை ரூபாய் 9.00இற்கு வாங்கி ரூபாய் 15.00இற்கும், ஒரு அழிறப்பரை ரூபாய் 5.00இற்கு வாங்கி ரூபாய் 9.00இற்கும் விற்பனை செய்கின்றார். ஒரு நாளில் இவ்விரு பொருட்களையும் விற்பனை செய்ததில் ரூபாய் 88.00இனை இலாபமாக பெற்றுள்ளார். இவர் விற்பனை செய்த அழிறப்பர்களின் பென்சில்களினதும் எண்ணிக்கை யாது?

(1) 10, 8 (2) 8, 9 (3) 5, 10

16. பின்வரும் கூற்றுக்களில் பொதுவான கருத்தினை வெளிப்படுத்தும் கூற்று எது?

(1) நாளை காலை மழை பெய்யும்

(2) வட மாகாணத்தில் ஐந்து மாவட்டங்கள் உள்ளன

(3) நாய்களை செல்லப்பிராணியாக வளர்ப்பது மிகவும் நல்லது

17. கணேஷ் மூன்று கம்பித்துண்டுகளை ஒரு செயற்பாட்டிற்காக எடுத்துக் கொண்டான் முதல் கம்பியின் நீளத்திலும் மூன்று மடங்கு அதிகமான நீளத்தில் இரண்டாவது கம்பியும் இவ்விரு கம்பிகளின் நீளங்களின் கூட்டுத்தொகையின் அரைப்பங்கு நீளத்தில் மூன்றாவது கம்பியும் இருந்தது. முதல் கம்பியின் நீளம் 2மீற்றர் எனின் ஏனைய இரு கம்பிகளின் மொத்த நீளம் யாது?


(1) 8 மீற்றர் (2) 10 மீற்றர் (3) 12 மீற்றர்

18. அருகில் தரப்பட்டுள்ள உருவில் காணக் கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 20 சதுரங்கள்

(2) 35 சதுரங்கள்

(3) 30 சதுரங்கள்




19. பூனையொன்று எலியைப் பிடிப்பதற்காக காத்திருக்கும் உருப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இதில் பூனை எலியைப் பிடிப்பதற்கு வடக்கு மற்றும் தெற்கு திசைகளில் செல்ல வேண்டிய தடவைகள் முறையே




(1) 3, 3 (2) 4, 3 (3) 3, 4

20. அருகில் அடுக்கப்பட்டிருக்கும் சதுரமுகிக் குற்றிகளை கிழக்கு திசையிலிருந்து மேற்கு திசை வழியே பார்க்கும் போது தென்படும் வடிவமைப்பு யாது?






(1)



(2)



(3)

21. பையொன்றில் சிவப்பு நிறப்பந்துகளின் எண்ணிக்கையிலும் 3 அதிகமாக பச்சை நிறப்பந்துகளும் பச்சை நிறப்பந்துகளிலும் பார்க்க 4 குறைவாக நீலநிறப்பந்துகளும் இருந்தன. நீல நிறப் பந்துகள் 8 இருக்கும் எனின் சிவப்பு நிறப்பந்து ஒன்றை வெளியே எடுப்பதற்கு முயற்சிக்கவேண்டிய தடவைகள் எத்தனை?

(1) 21 தடவை (2) 18 தடவை (3) 20 தடவை

22. மாணவரை விட ஆசிரியர் எப்போதும்..... ?

(1) பருமனில் பெரியவர்


(2) வயதில் பெரியவர்

(3) உருவத்தில் பெரியவர்

www.ikeu.lk

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

23. தரம் 05 ஆசிரியர் கரும்பலகையில் அருகில் உள்ளவாறு ஒரு வரிப்படத்தை வரைந்தார். இவ் வரிப்படத்தில் Bயை குறிக்க பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க



(1) அனைத்துமுண்ணி

(2) தாவர உண்ணி

(3) ஊன் உண்ணி

24. மைதானமொன்றில் காலைக்கூட்டத்தில் 55 மாணவர்கள் ஒரே வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். சுமதி இந்த வரிசையில் 42 வது இடத்திலும் ரதி அதே வரிசையில் 26 வது இடத்திலும் இருந்தனர். இதில் சுமதிக்கு பின்னால் இருக்கும் மாணவர்களில் ராகுல் நடுவிலும் ரதிக்கு முன்னால் இருக்கும் மாணவர்களில் சுரேன் நடுவிலும் நிற்கின்றனர். இந்த வரிசையில் ராகுல் மற்றும் சுரேன் நிற்கும் இடங்களாக அமைவது?

(1) 7வது, 13வது *(2)* 12வது, 15வது *(3)* 8வது, 10வது

25. கீழே அடிமட்டமொன்று மூன்று துண்டுகளாக உடைந்து விட்டது. இதில் இணைக்கப்படவேண்டிய நடுப்பகுதியின் நீளம் யாது?




(1) 7cm *(2)* 6cm *(3)* 5cm

26. கீழே தரப்பட்டுள்ள எண்கோலத்தில் வெற்றுக்கட்டங்களுக்கு வரவேண்டிய பெறுமதி யாது?



(1) 320, 311 *(2)* 356, 334 *(3)* 354, 334



27. பாதையில் ஒரு பஸ் வண்டி என்னைக் கடந்து சென்றுகொண்டிருக்கின்ற விதம் மேலே உருவில் தரப்பட்டுள்ளது. இந்த பஸ் வண்டி செல்லும் பக்கம் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கூற்று யாது?

(1) இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் செல்கின்றது

(2) வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் செல்கின்றது

(3) கிழக்கு திசையில் இருந்து மேற்கு திசை நோக்கிச் செல்கின்றது

www.kcu.lk

28. சிவா தனது முக்கோண வடிவான தோட்டத்தினை சுற்றி வர வேலிக் கம்பங்களையும் இரண்டு கம்பங்களுக்கிடையில் ஒவ்வொரு செவ்வரத்தை செடியும் நடுவதற்கு தீர்மானித்தார். அதற்காக தோட்டத்தின் ஒரு பக்கமிருந்து பார்க்கும் போது 5 கம்பங்கள் இருக்கும்படியாக சுற்றிவர கம்பங்கள் நட்டார். தோட்டத்தைச் சுற்றி வர நடுவதற்கு தேவையான செவ்வரத்தைச் செடிகளின் எண்ணிக்கை யாது?

(1) 14 செடிகள் (2) 13 செடிகள் (3) 12 செடிகள்

29. அருகில் தரப்பட்டுள்ள எண்கட்டத்தில் இடைவெளிக்கு வரவேண்டிய எண்களை தெரிவு செய்க

13	27	29	43	45	59
15				47	57
17	23			49	55
19	21	35	37	51	53

19	25	37
	21	39

(1)

25	31	41
	33	39

(2)


37	45	51
	47	53

(3)

30. 2022ம் ஆண்டு செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தது எனின் 2024ஆம் ஆண்டின் இறுதித் திகதிற்குரிய நாள் எதுவாக இருக்கும்?

(1) புதன் (2) வியாழன் (3) வெள்ளி

31. கீழே உள்ளவாறான கடதாசி மட்டையினை மடித்து உருவாக்கக் கூடிய ஆங்கில எழுத்தினை தெரிவு செய்க?



(1) V (2) C (3) D

32. எண்ணும் எண்கள் 20 தொடக்கம் 50 வரையிலான எண்களில் இலக்கம் 3 இனாலும் 4இனாலும் வகுபடக் கூடிய எண்களின் கூட்டுத்தொகை யாது?


(1) 84 (2) 82 (3) 80

33. நாவிதன் என்பதை 2346 என்றும் சேவகன் என்பதை 7516 என்றும் எழுதலாம். நவிவதன் என்பதை இலக்கத்தில் எவ்வாறு குறிப்பிடலாம்?

(1) 23546 (2) 93546 (3) 25364

34. அருகில் தரப்பட்டுள்ள திண்ம உருவில் செவ்வக வடிவ மேற்பரப்புக்கள் எத்தனை?

(1) 10 மேற்பரப்புக்கள்
(2) 15 மேற்பரப்புக்கள்
(3) 12 மேற்பரப்புக்கள்



www.ikedu.lk

35. ஓட்டப்போட்டியொன்றில் கலந்துகொண்ட வீரர்கள் தொடர்பில் கீழே சில தகவல்கள் தரப்பட்டுள்ளன

* ரமேஸிற்கு முன்னால் குமார் ஓட்டத்தை நிறைவு செய்தான்
* வருணுக்கு பின்னால் குமார் ஓட்டத்தை நிறைவு செய்தான்
* ரமேஸிற்குப் பின்பு குகள் போட்டியை ஓடி முடித்தான்

இப்போட்டியில் வெற்றி பெற்றவர் யார்?

(1) குமார் (2) வருண் (3) ரமேஸ்

36. இரண்டு மாணவர்கள் முதல் படியிலும் கடைசிப் படியிலும் நிற்கின்றனர். ஒருவர் 2 படிகள் கீழே இறங்கும் வேளையில் மற்றையவர் 3படிகள் மேலே ஏறுவார். 13 படிக்கட்டுகள் அங்கு இருக்கும் பட்சத்தில் இருவரும் சந்திக்கும் படிக்ககட்டு எது?

(1) 4வது (2) 5வது (3) 6வது

37. கண்டியிலிருந்து மாத்தளை வரை பெரியவர்களுக்கான பேருந்து கட்டணம் ரூபாய் 154.00 ஆகும். இக் கட்டணத்தில் அரைப்பங்கு சிறுவர்களுக்குரிய கட்டணமாகும். மாதவன் கண்டியிலிருந்து புறப்பட்டு தனது மகனை மாத்தளையில் உள்ள உறவினர் வீட்டிலிருந்து மீண்டும் கண்டிக்கு பேருந்தில் அழைத்துச் சென்றார். இருவருக்கும் செலவழிந்த பேருந்து கட்டணம் எவ்வளவு?

(1) ரூபாய்308.00 (2) ரூபாய்385.00 (3) ரூபாய்320.00

38. இடைவெளிக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க?

நோய் - மருந்து
பசி - உணவு
தாகம் - .....

(1) குளிர்பாணம் (2) தேநீர் (3) நீர்

39. அருகில் காட்டப்பட்டுள்ள கடிகார முகத்தில் 15 நிமிடங்கள் முந்திச் செல்கின்றது. இதனை சரி செய்த நேரத்திலிருந்து 35 நிமிடங்களை குறைத்தால் காட்டும் நேரத்தை தளவாடியின் முன் வைக்கும் போது தோன்றும் நேரத்தை தெரிவு செய்க



(1) 1.35 (2) 2.35 (3) 2.05

40. கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாக கொண்டு ?
இடப்பட்டுள்ள இடத்திற்கு வரவேண்டிய பெறுமதியை தெரிவு செய்க

$A+B = 12,\ B \times C = 20,\ D - C = 15$ $C \times C = ?$

(1) 16 (2) 9 (3) 25

www.lkedu.lk

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

மா/கலைமகள் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்படும்

மாணவர்களை பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
2022
வினாப்பத்திரம் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்:.....

திரு S. லக்ஸ்மிகாந்த் SLTS 2-II
BA, PGDE, HR
வளவாளர் அரசியல் விஞ்ஞானம், தமிழ், தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், ஆரம்பக்கல்வி
மா/வேவல்மட தமிழ் வித்தியாலயம்
077 691 3233

பரீட்சைக்கு தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாப்பத்திரத்திலேயே எழுதுக
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளை புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருப்பின் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
பெற்ற புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளி சரியாகும்	V/I/T/CH

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR
www.lkedu.lk

1. பின்வரும் பந்தியை நன்கு வாசிக்குக

வெள்ளாடொன்று ஒரு காட்டில் வாழ்ந்து வந்தது. தனக்கு உணவாக புற்களைத் தேடி பாறைகள் நிறைந்த மலை மீது ஏறிக் கொண்டு இருந்தது. புற்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சென்ற வெள்ளாட்டுக்கு அங்கு ஏமாற்றமே காத்திருந்தது. வெள்ளாடு எதிர்பார்த்த மாதிரி அங்கே புற்கள் அவ்வளவாக இல்லை. ஆனால் பாறைகளின் இடுக்குகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக புற்கள் தென்பட்டன. வெள்ளாடு அப்புற்களைத் தின்று தன் வயிற்றை நிரப்பிக் கொண்டது.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பந்தியை துணையாகக் கொண்டு விடை எழுதுக

1) காட்டில் வாழும் பிராணி எது?

……..

2) புற்கள் காணப்பட்ட இடம் எது?

……..

3) பருவதம் என்ற சொல்லிற்கு பதிலாக வந்துள்ள சொல்லை குறிப்பிடுக

……..

4) அங்கொன்றும் என்ற சொல்லை பிரித்தெழுதுக

……..

5) இறந்தகால ஒன்றன்பால் சொல்லொன்று குறிப்பிடுக

……..

6) தின்று என்ற சொல்லில் வந்துள்ள உயிர்க்குறிகளை குறிப்பிடுக

……..

2. பின்வரும் வாக்கியங்களில் தரப்பட்டுள்ள இடைவெளிக்கு பொருத்தமான விடைகளை தெரிவு செய்து கோடிடுக

1) குரங்கு …… மரத்தில் ஏறி விளையாடுகின்றது. (ஆழ , ஆல)
2) மிருகக் காட்சி சாலையில் ……..க்குதிரைகள் வளர்க்கப்படுகின்றன. (வரி , வறி)

3. பின்வரும் பேச்சு வழக்கு வாக்கியங்களை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக

1) அம்மா காலைலயே பதட்டம் ஆகிட்டாங்க.

……..

2) நேத்து அப்பா வீட்டுக்கு வந்தாரு.

……..

4. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக

1) கடமைகளை / உங்கள் / நீங்கள் / நிறைவேற்றுங்கள் / சரியாக

……..

2) நடத்தல் / வேண்டும் / நாம் / தந்தையரை / மதித்து / தாய் / எமது

……..

5. பின்வரும் பழமொழியினை முழுமைப்படுத்துக

தவளையும் தன்……

www.ikedu.lk

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

6. பின்வரும் வாக்கியத்திற்கு வரவேண்டிய பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக

தோட்டத்தில் மல்லிகை முல்லை தாமரை என்பன பூத்துள்ளது என தம்பி கூறினான்

7. பின்வரும் இணைமொழிகளை பூரணப்படுத்துக

1) பாலுந்…….. 2) பேரும் ……..

8. பின்வரும் கருத்துக்களுக்கு பொருத்தமான மரபுத்தொடர்களை எழுதுக

1) சொன்ன சொல் தவறுதல் :……...
2) உற்சாகப்படுத்தல் :…….

9. பின்வரும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான இரட்டைக் கிளவிகளை எழுதுக

1) அப்பா கோபத்தில் என்னிடம் …… வென பேசினார்.
2) அம்மா குழந்தையினை ……..ப்பான நீரில் நீராட்டினார்.

சிடு சிடு / பிசு பிசு / வெது வெது

10. பின்வரும் ஆண்பால் வாக்கியங்களை பெண்பால் வாக்கியங்களாக மாற்றி நிகழ்காலத்தில் எழுதுக


1) பேரன் பந்து விளையாடுவான்
……..
2) சீமான் நகர் வலம் வந்தான்
……..

11. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு சரியான தமிழ்ச் சொற்களை எழுதுக

1) Vehicle :…….. 2) Airport :……...

12. கீழே தரப்பட்டுள்ள உருவங்களுக்கு சரியான ஆங்கிலச் சொற்களை எழுதுக

1) 

2) 

13. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச்சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக

1) books / are / These / my :…….
2) are / you / Where / now :…….

www.lkedu.lk

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

14. **'அம்மா மெஹே'** என்ற சிங்களச் சொற்றொடருக்குரிய தமிழ்ச் சொற்றொடரை எழுதுக

……..

15. பின்வரும் தமிழ் வாக்கியத்தை சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக

நாளை வெள்ளிக்கிழமை :……....

16. ஏழாயிரத்து தொள்ளாயிரத்துப்பதினொன்று என்ற எண்ணை இலக்கத்தில் எழுதுக

……..

17. அருகில் இருக்கும் கட்டத்தில் உள்ள இலக்கங்களை பயன்படுத்தி உருவாக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை விரித்தெழுதுக

0	5
4	9

……...

18. பின்வரும் எண்களை சிறியது முதல் பெரியது வரை வரிசைப்படுத்தி எழுதுக

451, 415, 504, 405, 501 :……

19. தென்னைத்தோட்டமொன்றில் பறிக்கப்பட்ட தேங்காய்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ளது

நாட்கள்	தேங்காய்கள்
சனி	255
ஞாயிறு	301

1) இரு தினங்களிலும் பறிக்கப்பட்ட தேங்காய்கள் எத்தனை?.....


2) இரு தினங்களிலும் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகளுக்கிடையான வித்தியாசம் யாது?

……

20. ஒரு பாத்திரம் கொள்ளத்தக்க நீரின் அளவு 3500 மில்லி லீற்றர் ஆகும் தற்போது அதன் அரைப்பங்கு நீர் நிரப்பப்பட்டுள்ளது. மீதியளவு நீரை நிரப்புவதற்கு 250மில்லி லீற்றர் கொள்ளத்தக்க சிறிய பாத்திரம் ஒன்றைக் கொண்டு எத்தனை தடவை நீர் ஊற்றவேண்டும்?

……

21. சில நகரங்களுக்கிடையில் உள்ள தூரம் தொடர்பாக அருகில் உருப்படம் காட்டுகின்றது. இங்கு A, B இற்கிடையிலான தூரத்தினதும் C, D இற்கிடையிலான தூரத்தினதும் கூட்டுத்தொகை B, C இற்கிடையிலான தூரத்திற்கு சமனாகும்



1) நகரம் B யிலிருந்து C வரையுள்ள தூரத்தை குறிப்பிடுக?.....

2) நகரம் A, B இற்கும் C,D இற்கும் இடையிலான தூரங்களின் வித்தியாசம் யாது?

……..

22. 600 சென்ரிமீற்றர் துணியில் 150 சென்ரிமீற்றர் துணியை ஆடை தைப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய துணியின் நீளத்தை மீற்றர் சென்ரிமீற்றரில் குறிப்பிடுக

……

23. எண் 3இன் 2மடங்குடன் 10இனை கூட்டினால் கிடைக்கும் எண்ணை உரோம எண் குறியில் குறிப்பிடுக

……

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

www.kedu.lk


24. பிற்பகல் 6.45 இற்கு கொழும்பு நோக்கிச் செல்ல வேண்டிய பேருந்து 15நிமிடங்கள் தாமதித்தே புறப்பட்டது. 8 மணித்தியாலத்திற்குப் பின்னர் கொழும்பை சென்றடைந்தது. இடையில் 20 நிமிடங்கள் உணவு இடைவேளைக்காக ஒரு நகரத்தில் பேருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

1) பேருந்து கொழும்பை சென்றடைந்த நேரம் யாது?.....

2) பேருந்து பயணத்திற்காக மட்டும் செலவழித்த நேரம் எவ்வளவு?.

.....

25. அருகில் தரப்பட்டுள்ள உருவில் நிழற்றப்படாத பகுதியை பின்னத்தில் குறிப்பிடுக



.....

26. கீழே கடையொன்றில் வாங்கப்பட்ட பொருட்கள் தொடர்பான சிட்டையொன்று தரப்பட்டுள்ளது. அதில் உள்ள இடைவெளிகளை பூரணப்படுத்துக

பொருட்கள்	அளவு	ஒன்றினது விலை		மொத்த விலை	
புத்தகப்பை	2	750	00	.....	...
பேனை	10	20	00	.....	....
பிணை கருவி	3	.....	.....	300	00
மொத்த விலை				.....	.....
கொடுத்த பணம்				5000	00
மீதிப் பணம்				.....	...

27. சரண் தனது வீட்டிலிருந்து மேற்கு திசையினை நோக்கி 300மீற்றர் சென்று வலது பக்கமாக திரும்பி 400மீற்றர் சென்று அங்கிருந்து மீண்டும் மேற்கு நோக்கி 200மீற்றர் சென்று மீண்டும் இடது பக்கமாக 100மீற்றர் சென்று பாடசாலையை அடைந்தான்.

1) சரணின் வீட்டிலிருந்து பாடசாலை உள்ள திசை யாது?.....

2) சரண் பாடசாலை வரை சென்ற தூரம் எவ்வளவு?.....

28. ஒரு மாணவனுக்கு ஐந்து அப்பியாசக் கொப்பிகள் கிடைக்குமாறு 25 மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இருப்பினும் 32 மாணவர்கள் உள்ளனர்

1) 25 மாணவர்களுக்கு வழங்க தேவையான அப்பியாசக் கொப்பிகள் எத்தனை?

.....

2) 32 மாணவர்களுக்கு தேவையான அப்பியாசக் கொப்பிகளை பெற்றுக் கொடுப்பதற்கு மேலும் எத்தனை அப்பியாசக் கொப்பிகள் தேவை?

.....

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

www.ikeau.lk


29. வீட்டுத்தோட்டமொன்றில் ஐந்து நாட்கள் பறிக்கப்பட்ட பழங்கள் தொடர்பான நிரல் வரைபொன்று கீழே தரப்பட்டுள்ளது

1) சம எண்ணிக்கையில் பழங்கள் பறிக்கப்பட்ட நாட்கள் எவை?

.....

2) ஐந்து நாட்களும் பறிக்கப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....



30 தொடக்கம் 59 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்க

31. பின்வருவனவற்றில் வங்கியொன்றில் பெறக் கூடிய சேவை எது?

(1) காசுக்கட்டளை மூலம் பணம் பெறுதல்

(2) காசோலை மாற்றி பணம் பெறுதல்

(3) தபால் முத்திரைகளை பெற்றுக்கொள்ளுதல்

32. தேசியக் குறியீடுகளில் ஒன்றாக கருதக்கூடியது எது?

(1) வெள்ளரசு மரம் (2) ஆலமரம் (3) நாகமரம்

33. தாய் நாட்டின் மீது அன்பு செலுத்தக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்று

(1) தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல்

(2) வீதிகளில் குப்பைகளை வீசுதல்

(3) போதைப்பொருள் பாவனை

34. தாமரை மலர் பூக்கும் காலம் எது?

(1) ஆணி (2) மார்கழி (3) ஐப்பசி

35. நாய், புலி, முதலை ஆகிய பிராணிகளுக்கு பொதுவாக இருக்கும் பண்பு அல்லாதது

(1) உணவுகளை உறிந்து உண்ணுபவை

(2) ஈரூடகவாழிகள்

(3) கூரிய பற்களைக் கொண்டவை

36. மண்வெட்டி, கத்தி, அலவாங்கு முதலான பொருட்களை மேற்கொள்ளும் கைத்தொழிலாளர் யார்?

(1) கொல்லன் (2) மேசன் (3) தச்சன்

37. சந்தையில் வாங்கும் பொருட்களில் மேலுறையில் பெரும்பாலும் காணப்படுவது?

(1) பொருட்களின் நிறை

(2) தரச் சான்று

(3) சேர்க்கபடும் பொருட்கள்

38. உணவு உண்ணும்போது பின்பற்ற வேண்டிய பழக்கங்களில் ஒன்று

(1) உணவுகளை நன்கு மென்று உண்ணுதல்

(2) உணவு உண்ணும் போது அதிகளவு நீர் அருந்துதல்

(3) சப்புக் கொட்டி உண்ணுதல்

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR

www.ikedu.lk

39. மேடான இடங்களில் மரம் தறித்தல் மற்றும் மண் அகழ்தல் போன்ற காரணங்களால் ஏற்படக்கூடிய பாதிப்பு எது?

(1) வெள்ளப்பெருக்கு (2) மண்ணரிப்பு (3) நிலச்சரிவு


40. வீடுகளில் எரிவாயு அடுப்புகளை பயன்படுத்துபவர்கள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைமை எது?

(1) அடுப்பு இருக்கும் இடத்திற்கு அருகில் ஜன்னல் இருத்தல்

(2) எரிவாயு தாங்கியின்(சிலின்டர்) திறப்பை எந்நேரமும் திறந்து வைத்தல்

(2) அடுப்பையும் எரிவாயு தாங்கியையும் அருகருகில் வைத்திருத்தல்

41. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை காண்பிக்கும் குறியீடு எது?







42. பின்வருவனவற்றுள் தொற்றா நோய்கள் கொண்ட சொற்தொகுதியை தெரிவு செய்க

(1) டெங்கு, நீரிழிவு, மலேரியா

(2) இரத்த அழுத்தம், புற்றுநோய், நீரிழிவு

(3) சின்னம்மை, வாந்திபேதி, டெங்கு

43. அருகில் உள்ள செயற்பாட்டின் பிரதான நோக்கம் யாது?



(1) நீரின் வடிவங்களை அறிந்துகொள்ளுதல்

(2) நீரின் அடர்த்தியை கண்டறிதல்

(3) நீரின் வாயு நிலையினைப் பற்றி அறிதல்

44. குமரனின் ஓவியத்திற்கு நிறம் தீட்டுவதற்கு இளஞ்சிவப்பு நிறமே தேவைப்படுகின்றது. இருப்பினும் அவனிடம் கடும் சிவப்பு நிறமே உள்ளது. இளஞ்சிவப்பு நிறத்தை பெறுவதற்கு கடும் சிவப்பு நிறத்தோடு கலக்க கூடிய நிறம் எது?

(1) மஞ்சள் (2) வெள்ளை (3) பச்சை

45. பொதுப்போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படாத வாகனம் எது?

(1) பேருந்து (2) விமானம் (3) கார்

46. தபால் முத்திரையின் பாவனை தொடர்பில் சரியான விளக்கம் எது?

(1) முத்திரைகள் இன்றியும் கடிதங்களை தபால் மூலம் அனுப்ப முடியும்

(2) தபால் நிலையங்களில் முத்திரைகளை இலவசமாக பெற முடியும்

(3) ஒரு தடவை பயன்படுத்தப்பட்ட முத்திரையினை மீண்டும் பயன்படுத்த முடியாது

47. சந்திர கிரகணம் தோன்றக்கூடிய நாள் எது?

(1) பௌர்ணமி தினம் (2) அமாவாசை தினம் (3) ஞாயிற்றுக்கிழமை

48. கீழ்வரும் தொழில்களில் ஆபத்தான தொழில் எது?

(1) பானை வனைதல் (2) கடல் தொழில் (3) விவசாயம்

49. அதிகளவு காரம் கொண்ட உணவை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய பாதிப்பு எது?

(1) நீரிழிவு (2) இரப்பையழற்சி (3) குருதியமுக்கம்

www.ikeduu

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்

தமிழ் மொழி மூலம்



ENGLISH MEDIUM

සිංහල මාධ්‍ය

இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

50. அருகில் உள்ள உருவில் பொருள் ஒன்றை கப்பியின் மூலம் எடுப்பதற்கு தேவைப்படும் விசை யாது?



(1) தள்ளுதல்
(2) இழுத்தல்
(3) வீசுதல்

51. மின்பாவனையில் இருவாயி மின்குமிழ்களை பயன்படுத்தப்படுவதன் காரணம்?
(1) மிகவும் சிறியது என்பதால்
(2) வெளிச்சம் அதிகம் கிடைக்கும் என்பதால்
(3) மற்றைய மின்குமிழ்களை விட இருவாயி மின்குமிழ்கள் மின்சேதம் குறைவாகும்

52. மணமக்களின் வருகைக்காக வாசலில் பூரண கும்பம் வைத்து வரவேற்கும் சமயத்தவர்கள் யாவர்?
(1) இந்து (2) பௌத்தம் (3) இஸ்லாம்

53. ஓடும் போது அல்லது நடக்கும் போது சறுக்கி விழக் கூடிய தரையடைப்பு எது?
(1) மணல் தரை (2) புல்தரை (3) தரையோட்டுத் தரை

54. நீர் நிறைந்த போத்தல் ஒன்றின் நீருக்கு அடியில் அமிழக்கூடியவை?
(1) சிறுகற்கள் (2) மணல்மண் (3) களிமண்

55. பின்வருவனவற்றுள் அதிக வெப்பம் தேவைப்படும் சந்தர்ப்பம் அலல்லது தொழில்
(1) ஐஸ்கிறீம் தயாரித்தல்
(2) கருவாடு உற்பத்தி
(3) பால் உற்பத்தி

56. கணேஷ் தனது வெளிநாட்டு நண்பனுக்கு செய்தி ஒன்றினை துரிதமாக பரிமாறுவதற்கு பின்வருவனவற்றுள் பயன்படுத்தக் கூடிய தொடர்பாடல் சாதனம்
(1) கடிதம் (2) மின்னஞ்சல் (3) தொலைபேசி

57. தேசப்படத்தில் அதிவேக நெடுஞ்சாலையினை குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் நிறம் எது? (1) ஊதா (2) கறுப்பு (3) நீலம்

58. உடைந்த கண்ணாடித் துண்டுகளை இடவேண்டிய குப்பைக்கூடையின் நிறம் எது?
(1) பச்சை (2) சிவப்பு (3) நீலம்

59. கொட்டுது பார் மழை என்ற பாடலை பாடியவர் யார்?
(1) மு. நல்லதம்பி (2) தேசிக விநாயகம் (3) பாண்டியன்

60. வீதிச்சட்டங்களை மதிப்போம் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாது இருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்புடன் சரியான எழுத்துக்கூட்டலுடன் இருக்க வேண்டும்.

1 .....

.....

2.....

.....

3 .....

.....

www.tkedu.lk

Mr. S.Luxsmikanth SLTS 2-II BA, PGDE, HR